**கந்தளாய் பிரதேச சபை**
**திருகோணமலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்கை முறையே 2020 யூலை 15 மற்றும் 2020 யூலை 15 ஆந் திகதிகளில் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கந்தளாய் பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | உத்தியோகத்தர்களின் ஊழியர் பிணையாக பிடித்து வைக்கப்பட்டுள்ள ரூபா 83,000 மீதி வெளிப்படுத்தப்படாமல் தீர்க்கப்பட்டு காட்டப்பட்டிருந்தது. | கணக்கின் ஊடாக வெளிகாட்டப்பட வேண்டும். | 2020 ஆம் அண்டின் இறுதிக் கணக்குகள் கூற்றில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |
| (ii) | பிடியாணைக் கட்டணம் மற்றும் தண்டப்பணத்தின் கீீழ் 2017 மார்ச் மாதத்திலிருந்து 2018 நவம்பர் வரையான காலத்திற்குரிய ரூபா 12,608,287 தொகை மீளாய்வாண்டிலே வருமானமாக கருதி நிதிச் செயற்பாட்டுக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | சரியாக வருமான கணக்குகளின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் கணக்குகள் கூற்றில் சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| (iii) | இலங்கை வங்கி 4940252 ஆம் கணக்கிலக்கத்தை உடைய வங்கிக் கணக்கிற்கு நேரடியாக கிடைத்தல் ரூபா 2,365,000 மற்றும் கொடுப்பனவுகள் ரூபா 50,000 அத்துடன் வங்கிக்கட்டணம் ரூபா 450 பத்தகத்தில் திருத்தங்களை மேற்கொள்வதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் | அனைத்து சீர் திருத்தங்களையும் மேற்கொண்டு வருமான செலவு கணக்கிடப்பட்ட பின்னர் சரியான மீதியை கணக்கிற்கு சீர் செய்யப்பட வேண்டும். | உரிய மாதம் கடந்த பின்னர் வங்கிக்கூற்று எமக்கு கிடைக்கும் அதனால் நேரடி --- தெரிந்து கொள்வதற்கு முடிந்தது. 2020.01.08 அன்று தான் அதன்படி உரிய நேரடி --- வங்கி காசுப் புத்தகத்தின் மீதிக்கு கணக்கிடுவதற்கு முடியாதுள்ளதாக தாழ்மையுடன் அறியத் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கின் மீதி குறைவாக காட்டப்பட்டிருந்தது. | | தருகின்றேன். |
| (iv) | 2015 ஆம் ஆண்டுக்குரிய பெற வேண்டிய ரூபா 596,959 நிலுவை முத்திரைக் கட்டண கணக்கில் வரவு வைத்து முத்திரைக் கட்டண பெறுகை கணக்கில் செலவு வைத்து காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்தில் கணக்கில் சீர் செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் கணக்குகள் கூற்றில் சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |
| (v) | வீதவரி நிலுவை வருமானங்களை தீர்ப்பதற்காக முன்னைய வருடங்களுக்குரிய பெறப்பட்ட ரூபா 769,161 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்தில் கணக்கில் சீர் செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் கணக்குகள் கூற்றில் சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |

**(ஆ) கணக்காய்விற்காக தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 09 கணக்கு விடயங்கள் தொடர்பாக ரூபா 240,473,768 பெறுமதிக்கு தேவையான ஆதாரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவேடு முறையாக வருடாந்தம் நாளதுவரையாக்கப்பட வேண்டும். | தகைமையுள்ள செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்க வில்லை என்பதுடன் இறுதிக் கணக்குகள் மற்றும் பேணப்பட்டிருக்க வேண்டிய பதிவேடு தொடர்பாக முறையாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. அதனால் ஆரம்ப மீதியில் விபரமான தகவல்களை அலுவலக பதிவேடுகளிலிருந்து பெற்றுக் கொள்வது கடினமாகவுள்ளது. |

**1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இனங்காமைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 ஆம் வருட 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபைச் சட்டம் | | | |
| (i) | 24 ஆவது பிரிவு | பாதைகள் மற்றும் | இன்வென்ட்ரி சட்டத்தின் பிரிவின் வர்த்தமானி பிரகாரம் | 2019 ஆம் ஆண்டிற்காக பாதைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறிவித்தலுக்குட்படுத்த நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இன்வென்ட்ரியொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுரைக்கமைய அந்த பாதைகள் GPRS தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மீண்டும் தயாரிக்கப்படுகின்றது. வர்த்தமானி அறிவித்தலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகின்றேன். |
| (ii) | 159 ஆவது பிரிவு | மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 30,624,949 நிலுவை வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரிவின் பிரகாரம் நிலுவை வருமானம் துரிதமாக அறவிடப்பட வேண்டும். | கலந்துரையாடி எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வதாக அறியத்தருகின்றேன். |
| (ஆ) | 1988 ஆம் வருட பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள்<br>------------------------------ | | | |
| (i) | 33 ஆவது விதி | வீதவரியை செலுத்தத் தவறிய நபர்கள் தொடர்பாக பட்டியலொன்று பேணப்பட்டிருக்க வில்லை. | விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வீதவரியை செலுத்தத் தவறிய நபர்கள் தொடர்பாக பட்டியலொன்று பேணப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (ii) | 218 ஆவது விதி | அனைத்து காணி மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு தடவை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. சரியான தகவல்கள் பெறப்பட்டதன் பின்னர் அதன் கணக்கெடுப்பு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் செலவினத்தை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 10,508,619 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 2,547,663 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வீதவரியும் வரியும் | 2,217 | 2,217 | 1,531 | 9,695 | 2,288 | 2,323 | 2,223 | 9,009 |
| வாடகை | 6,170 | 6,170 | 2,955 | 4,989 | 16,650 | 4,913 | 3,159 | 1,774 |
| வேறு வருமானங்கள் | 4,500 | 4,500 | 11,659 | 11,660 | 2,725 | 2,725 | 1,266 | 11,810 |
| மொத்தம் | 12,887 | 12,887 | 16,145 | 26,344 | 21,663 | 9,961 | 6,648 | 22,593 |

#### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வீதவரி அறவிடுதலை அவதானித்து பார்க்கும் போது அதன் ஆரம்ப நிலுவையில் மற்றும் பட்டியலிடுதலில் நூற்றுக்கு 13.6 அளவிலான குறைந்த மட்டமாகும். மேலும், இந்த நீண்ட காலத்திலிருந்து காணப்படுகின்ற நிலுவைத் தொகையை அறவிடுவதற்காக சபையினால் வெற்றிகரமான வேலைத்திட்டமொன்றை இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | வீதவரியை துரிதமாக அறிவிடப்பட வேண்டும். | பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தவணை அடிப்படையில் நிலுவை வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**2.2.3 முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் என்பவற்றுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் முறையே ரூபா 6,733,171 மற்றும் ரூபா 4,926,635 அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவை முத்திரைக் கட்டணம் துரிதமாக அறவிடப்பட வேண்டும். | உரிய பணத்தை பெற்றுக் கொள்வதற்காக மாகாண வருமானங்கள் திணைக்களம் தகவல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பண்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள் சம்பந்தமான காரணங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய விடயங்கள் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரசட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிக் விதிக்கப்பட வேண்டிய இருப்பினும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போதும் 11 விடயங்களுக்கு உரிய 2013 ஆம் ஆண்டிலே தயாரிக்கப்பட்ட உப விதியை அனுமதி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | உப விதிகளின் அனுமதி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கந்தளாய் பிரதேச சபைக்கு 2019 ஆம் ஆண்டிலே 09 உப விதிகள் தயாரிக்கப்பட்டு மதிப்பிற்குரிய ஆளுநரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைத்த பின்னர் எஞ்சியுள்ள உப விதிகளை தயாரித்து அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும். |

**(ஆ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்டக்கழிவு முகாமைத்துவம் முறையாக செய்யப்படவில்லை. | திண்மக்கழிவு முகாமைத்து வத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகள் துரிதமாக தீர்த்து வைக்கப்பட வேண்டும். | விடையளிக்கப்படவில்லை. |

**(இ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குதல் தொடர்பாக முறையான எந்தவொரு வேலைத்திட்டம் பின்பற்றப்படவில்லை. | வருடாந்தம் வியாபார கணக்கெடுப் பொன்றை மேற்கொண்டு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டிய தொழில் முயற்சியாளர்களை அடையாளங் காணப்பட வேண்டும். | அந்த அனுமதிப் பத்திரம் செல்லுபடியற்ற தாவதற்கு 02 மாதங்களுக்கு முன்னர் நினைவூட்டல் கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 2014 ஆம் ஆண்டு அனுமதிப்பத்திரம் பெற்று 2017 ஆம் ஆண்டில் புதுப்பிக்காத வியாபாரம் தொடர்பாக தேடிப்பார்த்து அறிவிப்பதற்கு வருமானங்கள் பரீட்சகருக்கு அறிவிக்கப் பட்டுள்ளதாக அறியத் தருகின்றேன். |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கமுடைய நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கம், இலக்கு மற்றம் உரிய குறிகாட்டிகள் மீளாய்வாண்டில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கம், மற்றும் இலக்கு என்பவற்றை அடையாளங் கண்டு வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிலே சபையினால் நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கத்திற்கு உரிய ஏராளமான விடயங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அண்மிப்பதற்கான தலைப்பின் ஊடாக வேறான வேலைத்திட்டத்தின் மூலமாக உறுதியாக வேறுபடுத்தி அந்த நோக்கம் / இலக்கு என்பவற்றை அடைவதற்கான கோவைகளை பராமரித்தல் அல்லது அந்த நோக்கத்தை அடைவதற்கான திட்டமொன்று மாத்திரம் தயாரிக்கப்படவில்லை என்பதை அறியத் தருகின்றேன். |

## 3.2 முகாமைத்துவ திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 தொலைபேசி கோபுரங்கள் தொடர்பாக கட்டணம் வசூலிக்க எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | வருமானத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | துனைச்சட்டங்கள் நடைமுறையில் இல்லாததால் விதிக்கப்பட் வேண்டிய சேவைக்கட்டணங்களை வசூலிக்க முடியவில்லை சேவைக்கட்டணமாக ஆண்டிற்கு ரூபா 20,000 வசூலிக்க 23.06.2020 அன்று நடைபெற்ற சபையில் முன்மொழிவுகள் செய்யப்பட்டுள்ளன என்பதனை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | பொருள் உதவியை வழங்குவதில் நபர்களின் வருமான நிலையை மறுபரிசீலனை செய்யும் கிராம நிலதாரியின் பரிந்துரை மற்றும் பிரதேச செயலாளரின் ஒப்புதலையும் பெறாமல் பொருள் உதவி வழங்கப்பட்டுள்ளது. | பொருள் உதவி பெறுவதற்க முன்னர் தகுதியனை சரிபார்க்க வேண்டும். | இந்த உதவி சம்பற்தப்பட்ட பிரிவை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினரின் கோரிக்கை பரிந்துரை வழங்கியுள்ளது. |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் பஸ் தரிப்பிட கடைகளின் நிலுவை வாடகை வருமானம் ரூபா 1,007,890 வும் மற்றும் பொதுச்சந்தை கடைகளின் நிலுவை வாடகை வருமானம் ரூபா 2,999,280 ஆகும். | சபையின் நன்மைக்காக நிலுவை வாடகை பணத்தை அறவிட பொருத்தமான நடைமுறை ஒன்றை நிறுவவேண்டும். | இந்த கடைகளின் குத்தகை 2017 ஆம் ஆண்டிலே இடம்பெற்றுள்ளதுடன் சபை நிறுவப்படும் போது ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது. அப்போதே இந்தக் கடைகளை பெற்றிருந்தவர்களின் வியாபார நடவடிக்கைகள் செயலிழந்து அதிகமான கடைகள் மூடப்பட்டிருந்தது. குத்தகை வழங்கப்பட்டுள்ள காலம் 03 வருடங்களாகும். இந்த கடைகளை பெற்றிருந்தவர்களின் அதிகமானவர்கள் அதை மூட வைத்திருந்ததுடன் கந்தளாய் பொதுச் சந்தை கடைகளை கவர்ச்சிகரமான வியாபார இடமாக மாற்றும் நோக்கில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஏகோபித்த தீர்மானத்தினால் ரூபா 5,000 இற்கு மூடப்பட்டிருந்த கடைகளை வழங்குவதற்கு |

தீர்மானிக்கப்பட்டதுடன் டென்டர் மேற்கொள்ளும் போது இரண்டாவது டென்டர் உரித்தானவர் கேட்டிருந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் அப்படி கேட்கப்பட்டிரா மூடப்பட்டிருந்த கடைகள் வழங்கப்பட்டதாக தெரிவித்துக் கொள்வதில் விருப்பப்படுகின்றேன்.

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அபிவிருத்தி உத்தியோகத்தர், வருமானப் பரீட்சகர், இயந்திரம் இயக்குபவர், வேலைப் பரீட்சகர் மற்றும் உபகரண இயக்குபவர் ஆகிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | மாதாந்த பதவியணியினர் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக உரிய நியமன அதிகாரி இதுவரையும் நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்க வில்லை. |
| (ஆ) | 07 பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட சேவையாளர்களின் எண்ணிக்கையை விஞ்சி 33 சேவையாளர்கள் உள்வாங்கப்பட்டிருந்தனர். | மேலதிக சேவையாளர்கள் இடம்பெறக் கூடாது. | அதிகப்படியான ஊழியர்கள் உள்வாங்கப் படாமலிருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |
| (இ) | சேவையை விட்டுச்சென்ற மற்றும் சேவையிலிருந்து நீக்கப்பட்ட எட்டு ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் ரூபா 1,458,314 ஆகும். | நிறுவனக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஒரு ஊழியர் நிதிமோசடிக்கு உட்படுத்தப்பட்டு சிறைத் தண்டனைக்கட்படுத்தப்பட்டி ருந்ததுடன் அந்த பணத்தை அறவிடுவதற்கு முடியாதுள்ளது. இன்னுமொருவர் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் சேவைக்கு சமூகந்தரவில்லை சட்ட நடவடிக்கைகளுக்கான செலவு அறவிடப்பட வேண்டிய மீதியை விட அதிகமானதென்பதால் சபை தீர்மானத்துடன் அறவிடமுடியா கடனாக பதிவழிக்கப்படுவதாக அறியத்தருகின்றேன். சேவையிலிருந்து ஒய்வு பெற்றுள்ள |

| | | |
|---|---|---|
| | | உத்தியோகத்தர்களின் பணத்தை பெற்றுக்கொள்வதற்காக உரிய நிறுவனங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தற்போது கல்விக் காரியாலயத்தில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு அந்த காரியாலயத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 குறைப்பயன்பாட்டுச் சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 வாகனங்கள் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படாமல் விளைவற்று வளாகத்தினுள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. | குறைப் பயன்பாட்டு சொத்துக்கள் முழுமையாக பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டும். | திருத்தங்களை மேற்கொண்டு பாவனைக் குட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படுமென்பதை அறியத் தருகின்றேன். |
| (ஆ) | கார் 11 வருடங்களுக்கு அதிகமான காலம் அழிவதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன் 02 உழவு இயந்திர ட்ரேலர்கள் 05 வருடங்களாக அழிவுறுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | கூடிய விரைவில் ஏல விற்பனைக் குட்படுத்தப்பட வேண்டும். | பிரதான செயலக பொருளியிலாளர் அலுவலகத்திற்கு பயன்படுத்த முடியாத வாகனங்களை ஏல விற்பனைக்குட்படுத்துமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.5.2 வாகன நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பாவனையிலுல்ல 03 வாகனங்களை முறையாக உரித்தாக்குவதற்காக நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | உரித்தாக்க முடியுமான வாகனங்கள் உரித்தாக்கப்பட வேண்டும். | விடையளிக்கப்படவில்லை. |

**3.6 பெறுகைகள்**

**3.6.1 பெறுகைகள் திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) நிச்சயித்து விபரங்கள் மற்றும் பெறுமதிகளை குறிப்பிடாமல் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. | முறையான வருடாந்த பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து பெறுகைகள் அறிக்கை 2020 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டள்ள மென்பதை தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |
| (ஆ) பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக கூறுவிலை சபை உத்தியோகத்தரின் ஊடாக இடம்பெறுவதற்கு பதிலாக உரிய ஏற்பாட்டிற்குரிய மந்திரியின் மூலமாக கூறுவிலைகள் விடயத்திற்கு பொறுப்பான எழுதுவினைஞருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த கூறவிலையின் படி ரூபா 8,709,955 பெறுமதியான பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கூறுவிலை இடம்பெற வேண்டும். | சபையின் மேன்மை தங்கிய தலைவரின் அறிவுரையின் படி உத்தியோகத்தரினால் பெறுகைகள் நடவடிக்கைகள் இடம்பெற்றிருப்பதுடன் மந்திரிமார்கள் நேரடியாக அதற்காக சம்பந்தப்படவில்லை என்பதை தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தாலும் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் மற்றும் தலைவர் சபையில் நடாத்தப்பட்டிருந்த குழுக் கூட்டத்திற்கும் பங்குபற்றியிருக்கவில்லை. | நிறுவன பிரதானியின் கட்டாய பங்குபற்றலுடன் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டுக்குரிய 04 உள்ளகக் கணக்காய்வு குழுக்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் 2020 ஆம் வருடத்திலிருந்து உரிய முறையில் பங்குபற்றி உரிய குழுக்கள் நடாத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன். |

## 3.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தனிப்பட்ட நபருக்கு பொருளுதவி வழங்கும் போது அவரின் வருமான நிலைமை தொடர்பாக கிராம உத்தியோகத்தரின் பரிந்துரை மற்றும் பிரதேச செயலாளரின் அனுமதியில்லாமல் மாத்திரம் பொருளுதவி வழங்கப்பட்டுள்ளது அவதானிக்கப்பட்டது. | தகைமைகள் பரிசீலித்துப் பொருளுதவி வழங்கப்படப்பட வேண்டும். | உரிய கோட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற மந்திரியின் வேண்டுகோள் மற்றும் பரிந்துரையின் அடிப்படையில் அந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. |

### 3.5.2 வாகன நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 வாகனங்களை முறையாக உரித்தாக்குவதற்காக மீளாய்வாண்டிலேயும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | உரித்தாக்க முடியுமான வாகனங்கள் உரித்தாக்கப்பட வேண்டும். | விடையளிக்கப்படவில்லை. |

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.6.1 குறைப்பயன்பாட்டுச் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 வாகனங்கள் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படாமல் விளைவற்று வளாகத்தினுள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. | குறைப் பயன்பாட்டு சொத்துக்கள் முழுமையாக பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டும். | திருத்தங்களை மேற்கொண்டு பாவனைக் குட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படுமென்பதை அறியத் தருகின்றேன். |
| (ஆ) | கார் 11 வருடங்களுக்கு அதிகமான காலம் அழிவதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன் 02 உழவு இயந்திர ட்ரேலர்கள் 05 வருடங்களாக அழிவுறுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | கூடிய விரைவில் ஏல விற்பனைக் குட்படுத்தப்பட வேண்டும். | பிரதான செயலக பொருளியிலாளர் அலுவலகத்திற்கு பயன்படுத்த முடியாத வாகனங்களை ஏல விற்பனைக்குட்படுத்துமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.5.2 வாகன நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 03 வாகனங்களை முறையாக உரித்தாக்குவதற்காக மீளாய்வாண்டிலேயும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | உரித்தாக்க முடியுமான வாகனங்கள் உரித்தாக்கப்பட வேண்டும். | விடையளிக்கப்படவில்லை. |